V12His

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

-----

## வகுப்பு 12

காலஅளவு: 3.00 மணிநேரம் | **வரலாறு** | மொத்த மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **20×1=20**

1) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர் ............
அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள் இ) A.O. ஹியூம் ஈ) பால கங்காதர திலகர்

2) இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930 இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

3) ஆந்திர மாநில கோரிக்கையினை முதன் முதலில் எழுப்பியவர்
அ) பொட்டி ஸ்ரீராமுலு ஆ) பட்டாபி சீத்தாராமையா
இ) கே.எம்.பணிக்கர் ஈ) டி.பிரகாசம்

4) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது?
அ) 200 ஆ) 150 இ) 100 ஈ) 75

5) "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைன் சிரோல் இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

6) கல்பனாதத் எதனுடன் தொடர்புடையவர்?
அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேசன் ஆ) வங்காள சபை
இ) இந்தியக் குடியரசு இராணுவம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

7) மகாத்மா காந்தியடிகளின் ''செய் அல்லது செத்துமடி'' என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
அ) சட்டமறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

8) காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1917 ஆ) 1915 இ) 1918 ஈ) 1916

9) பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெய பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

10) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1930 ஆ) 1920 இ) 1935 ஈ) 1925

11) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட் இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ்.ஆல்காட்

12) இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

13) ''சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அடைந்தே தீருவேன்'' எனக் கூறியவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) பாரதியார்

14) **பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க:**

| **பட்டியல் - I** | | **பட்டியல் - II** |
|---|---|---|
| அ) அன்னிபெசண்ட் | - | 1. அலிகார் இயக்கம் |
| ஆ) சையது அகமது கான் | - | 2. தயானந்த சரஸ்வதி |
| இ) கிலாபத் இயக்கம் | - | 3. பிரம்மஞான சபை |
| ஈ) சுத்தி இயக்கம் | - | 4. அலி சகோதரர்கள் |

அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4 இ) 4 3 2 1 ஈ) 2 3 4 1

15) "How India wrought for freedom" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) அன்னிபெசண்ட் இ) C.R. தாஸ் ஈ) திலகர்

16) 1923-இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுதந்திரா கட்சி ஆ) சுயராஜ்ய கட்சி இ) கம்யூனிஸ்ட் கட்சி ஈ) கதார் கட்சி

17) **கூற்று** : காகிதம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது.
**காரணம்** : நகரும் அமைப்பிலான அச்சு இயந்திரத்தை ஜெர்மனி கண்டுபிடித்தது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

18) வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ..............
அ) போர்த்துக்கீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்

19) சூயஸ் கால்வாய் செங்கடலை ............. கடலுடன் இணைக்கிறது.
அ) ஏடன் வளைகுடாவுடன் ஆ) காம்பே வளைகுடாவுடன்
இ) மத்திய தரைக்கடலுடன் ஈ) அரபிக் கடலுடன்

www.Padasalai.Net

20) கீழ்க்கண்டவற்றுள் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
அ) வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ் ஆ) இறுதி விருந்து
இ) மோனலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்

## பகுதி - II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**
**வினா எண் 30-க்கு கட்டாயம் விடை கூறவும்.**

21) தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
22) புதிய நில உடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
23) இல்பார்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
24) அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
25) பசுமைப்புரட்சி என்றால் என்ன?
26) மிதவாத தேசியவாதிகளின் ''இறைஞ்சுதல் கொள்கை'' என்றால் என்ன?
27) முதல் உலகப்போரில் பங்கு பெற்ற மைய நாடுகளின் பெயர்களை எழுதுக.
28) பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
29) பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.
30) சரடோகா போரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

## பகுதி - III

**பின்வரும் வினாக்களில் எவையேனும் 7 வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்கவும்.** **7×3=21**
**வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) வ.உ.சிதம்பரத்தின் சுதேச இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
32) சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
33) காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார்?
34) அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
35) பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
36) டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
37) நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியும்.
38) ஐ.நா.சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.
39) ''செப்டம்பர் படுகொலைகள்'' எதனால் ஏற்பட்டது?
40) தனது தொழிற்சாலையில் பணியிலிருந்த ஊழியர்களின் முன்னேற்றத்திற்கு இராபர்ட் ஓவன் மேற்கொண்ட முன்னோடி தன்மையிலான நடவடிக்கைகளை மதிப்பிடுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக்கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?
42) அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக. **(அல்லது)**
ஆ) டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.
43) அ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்குமேடைக்கு இட்டுச்சென்றது? **(அல்லது)**
ஆ) இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு?
44) அ) சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது? **(அல்லது)**
ஆ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.
45) அ) முதல் உலகப் போருக்கான காரணங்களையும், விளைவுகளையும் மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?
46) அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து எழுதுக. **(அல்லது)**
ஆ) உலக புற எல்லை வரைபடத்தில் வாஸ்கோடகாமா சென்ற கடல்வழியை வரைந்து அதில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
(i) நன்னம்பிக்கை முனை (ii) இந்தியப் பெருங்கடல் (iii) பிலிப்பைன்ஸ் தீவுகள்
47) அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும், நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும். **(அல்லது)**
ஆ) கி.பி. 1885 முதல் கி.பி. 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

----------

www.Padasalai.Net